

▸ மியாட் மருத்துவமனையில் கல்லீரல் நோய் சிகிச்சைக்காக 'லிவர் ஜிம்' மையம் தொடங்கப்பட்டுள்ளது. இதில், மருத்துவமனை கொள்கைகள் குறித்த பலகையில் மருத்துவமனை இணை நிர்வாக இயக்குனர் பிரித்திவி மோகன்தாஸ், டாக்டர் சுரேந்தர் ஆகியோர் கையெழுத்திட்டனர். அருகில், மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ் மற்றும் டாக்டர்கள்.

## மியாட் மருத்துவமனையில்

# கல்லீரல் நோய் விழிப்புணர்வுக்கு 'லிவர் ஜிம்' மையம் தொடக்கம்

சென்னை, ஜூன் 7: சென்னை மியாட் மருத்துவமனையில், கல்லீரல் நோய் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 'லிவர் ஜிம்' என்ற மையம் தொடங்கப்பட்டுள்ளது.

மியாட் மருத்துவமனையின் கல்லீரல் சிகிச்சை துறை டைரக்டர் டாக்டர் சுரேந்திரன் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:

இந்தியாவில் சிறியவர்கள், பெரியவர்கள் என வசதி வித்தியாசம் இன்றி மது அருந்துவது, கொழுப்பு நிறைந்த உணவுகளை சாப்பிடுவது மற்றும் உடல் உழைப்பு இல்லாத வேலைகள் செய்வது போன்றவைகளால் கல்லீரல் பாதிப்பு அதிகரித்து வருகிறது. நீரிழிவு மற்றும் ஹெபடைடிஸ் பி அன்ட் சி போன்றவைகளும் இதற்கு காரணமாக உள்ளது.

இந்தியாவில் 5 பேரில் ஒருவர் கல்லீரல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது, 2025ல் மேலும் அதிகரிக்கும் கூறப்படுகிறது. பொதுவாக 90 சதவீதம் அளவுக்கு கல்லீரல் சேதமடைந்த பிறகுதான், ஒருவருக்கு கல்லீரலில் நோய் இருக்கிறது என்பது தெரியவரும். சிகிச்சைக்கு வருபவர்களில் 90 சதவீதம் பேர் தங்களுக்கு கல்லீரல் பாதிப்பு உள்ளது என்பதைகூட அறியாதவர்களாக இருக்கின்றனர்.

நோய் பாதிப்பு அதிகமானால் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மட்டுமே ஒரே தீர்வாகி விடுகிறது. இந்த சிகிச்சைக்கு ₹30 லட்சம் வரை செலவாகும்.

உடலில் ஏற்படும் சில அறிகுறிகளை வைத்து இந்நோயின் ஆரம்பத்தை மருத்துவ பரிசோதனையின் மூலம் தெரிந்து கொள்ளலாம். குறிப்பாக பசியின்மை, வயிறு வீக்கம் போன்ற சில பிரச்னைகள் இருந்தால் உடனடியாக மருத்துவரிடம் சென்று ஆலோசனை பெற வேண்டும்.

பொதுமக்களுக்கு இதுபற்றி ஆலோசனை வழங்க மியாட் மருத்துவமனையில் 'லிவர் ஜிம்' என்ற புதிய மையம் துவங்கப்பட்டுள்ளது. இங்கு, கல்லீரல் நோய் பற்றி அறிந்து கொள்வது, பாதிப்பை சரிசெய்வது, சிகிச்சை முறை உள்ளிட்டவை குறித்து சிறப்பு மருத்துவர்களால் விளக்கப்படுகிறது.

மியாட் மருத்துவமனையில் துவங்கப்பட்டுள்ள கல்லீரல் பிட்னஸ் திட்டமானது, இந்நோய் பாதிப்பு மற்றும் நோயின் அறிகுறிகளோடு வருபவர்களுக்கு நவீன மருத்துவ சிகிச்சையும் அளிக்கப்படும். கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கு பின் ஏற்படும் விளைவுகள் குறித்தும் விளக்கப்படும்.

கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை என்பது மிகவும் சிக்கலான மருத்துவ வழிமுறையாகும். ஆனால் மியாட் மருத்துவமனையில், இந்த பிரிவில் சிறப்பு நிபுணர்கள் மற்றும் சர்வதேச தரத்திலான உபகரணங்கள், நவீன மருத்துவ வசதிகளை கொண்டுள்ளதால் இதுபோன்ற ஆபரேஷன்கள் வெற்றிகரமாக செய்யப்பட்டு வருகிறது.

இவ்வாறு டாக்டர் சுரேந்திரன் கூறினார்.

பேட்டியின் போது, மியாட் மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ், நிர்வாக இயக்குனர் டாக்டர் பிரீத்வி மோகன்தாஸ் மற்றும் கல்லீரல் சிகிச்சை துறை மருத்துவர்கள் உடன் இருந்தனர்.